# உழவர் விழாச் சிறப்பு மலர்

தைத்திங்கள் முதலாம் நாள், 1972

கலைப்பெரு மன்றம், அம்பனை, தெல்லிப்பழை



"இலக்கியச் செல்வர்
இரசிகமணி
கனக. செந்திநாதன்
கௌரவ விருது"

நவீன இயந்திரங்களால் தயாரிக்கப்பட்டவை

# "ஓட்டகம்" மார்க்


★ ஓடுகள்

★ செங்கற்கள்

- சிறந்த ரகம்
- உயர்ந்த தரம்
- நீண்டநாள் பாவிப்பு

❊ மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

❊ ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.



வடமாகாணத்தில் சிறந்த ஓட்டுத் தயாரிப்பாளர்கள்

ஜனு செங்கல், ஓட்டுத் தொழிற்சாலை

கண்டாவளை — பரந்தன்

# உழவர் விழா மலர்

தமிழ் வளர்த்த

சான்றோர்கள் அனைவருக்கும்

இம் மலரினைக்

காணிக்கையாக்குகின்றோம்.

கலைப்பெரு மன்றம்
அம்பனை
தெல்லிப்பழை
1972

நவீன இயந்திரங்களால் தயாரிக்கப்பட்டவை

## "ஓட்டகம்" மார்க்

★ ஓடுகள்

★ செங்கற்கள்

▣ சிறந்த ரகம்

ஜனு செங்கல், ஓட்டுத் தொழிற்சாலை

கண்டாவளை — பரந்தன்

# உழவர் விழா மலர்

தைத் திங்கள்
முதலாம் நாள்
மகாஜனக் கல்லூரியிற்
கொண்டாடிய
நான்காவது ஆண்டு
உழவர் விழா
வெளியீடு.

கலைப்பெரு மன்றம்
அம்பனை
தெல்லிப்பழை
1972

## மன்றக் காப்பாளர்கள் 71–72

| | |
|---|---|
| பெருந்தலைவர்கள் : | திரு. தெ. து. ஜெயரத்தினம், B. A., J. P. |
| | திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், Q. C.<br>(நா. உ. காங்கேசன்துறை) |
| | திரு. ம. சிதம்பரநாதன்<br>(ஊர்மன்றத் தலைவர், தெல்லிப்பழை) |
| தலைவர் : | திரு. ச. விநாயகரத்தினம்<br>(ஆசிரியர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை) |
| துணைத்தலைவர் : | திரு. பொன். நாகரத்தினம் |
| பொதுச்செயலாளர் : | திரு. வை. குணாளன் |
| துணைச்செயலாளர் : | திரு. நாக. சிறீகெங்காதரன் |
| பெரும்பொருளாளர் : | திரு. நா. ஆறுமுகம்<br>(ஆசிரியர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை) |
| பொருளாளர் : | திரு. க. முருகதாசன் |
| உறுப்பினர் : | திரு. ஆ. சிவநேசச்செல்வன், B. A. (சிறப்பு) |
| | திரு. த. குணரத்தினம், B. A. (இலங்கை) |
| | திரு. சி. முருகையா |
| | திரு. கி. சண்முகரத்தினம் |
| | திரு. நா. நவரத்தினம் |
| எண் ஆய்வாளர்கள் : | திரு. க. பத்மசேகரம்<br>(கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்) |
| | திரு. சீ. கிருஷ்ணமூர்த்தி<br>(மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை) |

# மன்றத் தலைவரின் செய்தி

தமிழ் மக்கள் தனிச் சிறப்பளித்துக் கொண்டாடி மகிழ்வுறும் திருநாள் — பொங்கற் புதுநாள். உழைப்பின் பெருமையை உணர்ந்து நடத்தப்படும் நன்றி அறிவிப்பு விழா இவ் உழவர் விழா. மகிழ்ச்சி பொங்கும் இந்நாளில் அகமும் முகமும் மலர வாழ்வின் பொலிவு துலங்கித் தெரிகிறது.

தமிழ் மக்களுக்கென்று குறிப்பாக அமைந்த மங்களகரமான இந்நாளில் எமது கலைப்பெரு மன்றம் இம் மலரினை வெளியிடுவதனை யிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். தமிழரின் இலக்கிய சமுதாய வாழ்வில் புகழ்பெற்று விளங்குபவர்களின் கட்டுரை, கவிதை முதலியன இம் மலரினைச் சிறப்பிக்கின்றது. கவிஞர் ரவீந்திரர் கூறியதுபோல் ''இம் மலர் முடியிலே சூடுவதற்குத் தகுதியற்றதாயினும்'' தமிழன்னையே உன் காலடியில் சூட்டுவதில் மகிழ்வுறுகிறேன்.

ஆடம்பரத்துக்கன்றி தமிழ்க் கலைகளை, கலாச்சாரத்தை வளர்க்கும் பேரவாவுடன் செய்யும் தொண்டுதான் உண்மையில் தமிழுக்குச் செய்யும் தொண்டாகும். இத் தொண்டினை மன்றம் சிறப்புறச் செய்வதனை யிட்டு பெருமிதம்கொள்கிறேன். மன்ற இளைஞர்களின் ஆர்வமும் ஒற்றுமையும் பாராட்டத்தக்கது. கருத்துவேற்றுமைகள் இருப்பினும் தமிழ்ப் பற்றால் உந்தப்பெற்று, அவ் வேற்றுமையெல்லாம் மறந்து, பழமையும், பெருமையும், பண்பும், கலாச்சாரமும் விளங்கித் திகழும் தனிச் சிறப்புமிக்க இவ் விழாவினை சிறப்புற நடாத்துவதையிட்டு மெச்சுகிறேன்.

நாடு வாழ்ந்திட, மக்கள் ஏற்றம்பெற நம் ஆன்றோர்கள், சான்றோர்கள் கூறியன யாவை என்பதனை ஆய்ந்தறிய இவ் விழா நாளில் முயலுவோமாக. இன்னல் பல பின்னிக்கிடந்திடினும், இன்றோர் நாளாகிலும் அவைதமை மறந்து இன்புற்று விழா நடாத்தி மகிழ்ச்சி பெற்றிட வேண்டுகின்றேன்.

வணக்கம்.

**ச. விநாயகரத்தினம்**

கலைப்பெரு மன்றம்
அம்பனை
தெல்லிப்பழை

சிறந்த தொழில்நுட்ப வல்லுனர்களால்
தயாரிக்கப்பட்ட
★ செருப்பு
★ சப்பாத்து
வகைகள்
எம்மிடம் எந்தநேரத்திலும்
பெற்றுக்கொள்ளலாம்.

ஓடர்கள்
குறித்த தவணையில்
செய்து தரப்படும்.

"மோகன்ஸ்"
கே. கே. எஸ். வீதி
தெல்லிப்பழை

★ அழகாகத் திகழுங்கள்
★ நேர்த்தியாக உடை அணியுங்கள்

நவநாகரிகமான உடைகளை
★ சிறந்த முறையில்
★ குறைந்த செலவில்
★ குறுகிய காலத்தில்
நம்பிக்கையுடன் தயாரித்தளிப்பவர்

"அனஸ்"
ரெயிலறிங் & றெடிமேட் ஸ்ரோர்ஸ்
(றெடிமேட் உடை விற்பனையாளர்கள்)
கே. கே. எஸ். வீதி
தெல்லிப்பழை

உரிமையாளர்: எம். எம். அபூபக்கர்

உங்கள் விசேஷ தினங்களுக்குத்
தேவையான
சிற்றுண்டி வகைகள்
சிறந்த முறையில்
ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்குத்
தொடர்புகொள்ளவும்

ஆனந்தபவான் கபே
கே. கே. எஸ். வீதி
தெல்லிப்பழை

இராஜாஸ்
ஸ்ரோர் & மோட்டோர் வேக்ஸ்

❋ மோட்டார் சைக்கிள்
❋ நீரிறைக்கும் இயந்திரம்
❋ சைக்கிள்
திருத்தப்படும்.

சைக்கிள் உதிரிப்பாகங்கள்
நிதான விலையில் கிடைக்கும்.

RAJAH'S
STORE & MOTOR WORKS
K. K. S. Road
TELLIPPALAI

எமது மன்றக் காப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான

## திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

ஆற்றவேண்டிய பணியை ஆற்றவேண்டிய முறையில் சீரோடும் சிறப்போடும் நடாத்திவரும் கலைப்பெருமன்றம் தனது நான்காவது ஆண்டு உழவர் விழாவினைக் கொண்டாடுவது உவகையூட்டும் செய்தி யாகும்.

மன்றத்தை இந்த அளவிற்கு வளர்த்து உயர்த்திய பெருமக்கள் அனைவரும் இந்த நேரத்தில் நன்றியோடு நினைவுகூர்வதற்கு உரியவர்க ளாவர்.

இவ்விழாக் காணும் இம் மன்றம் ஒளிமயமான பொன்விழாவும் கண்டு பல்லூழியும் காணுமாக.

மலர் மணக்க, விழா சிறக்க, மன்றம் புதுப் பொலிவுபெற்று வளர என் இதய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கலைப்பெரு மன்றம் வாழ்க — அதன்
புனிதத் தமிழ்ப்பணியென்றும் வளர்க.

தெல்லிப்பழை
10-1-72

**சா. ஜே. வே. செல்வநாயகம்**

# கலையரசர் வாழ்த்துகிறார்

ஆரம்பித்து நான்கு வருடங்களுள் கலைகளைச் சிறந்தமுறையில் விருத்திசெய்து செயலாற்றிவரும் தெல்லிப்பழை கலைப்பெரு மன்றத்தைப் பாராட்டுகிறேன். இவர்களால் நடிக்கப்பட்ட நாடகங்களைப் பார்த்திருக்கிறேன். நாடகக்கலையைத் தக்கமுறையிற் கொண்டு செல்வதற்கு இவர்களாற் கையாளப்படும் விதிகளை அவதானித்து மிக மகிழ்ச்சியடைந்தேன்.

தைப்பொங்கல் திருநாளில் உழவர் விழாக் கொண்டாடுவது உகந்ததே.

இந்த விழாவில் தமிழ் இலக்கியக் கலையை வளர்ப்பதில் அயராது தொண்டு புரிந்துவரும் இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்களைக் கௌரவிப்பதை அறிந்து மிக மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் நீண்ட சுகவாழ்வு பெற்றுத் தமது கலைப்பணியை ஆற்றிவர இறைவன் அருள் புரிவாராக

கலைகள் வளரக் கலைத்தொண்டு புரிபவர்களைக் கனப்படுத்த வேண்டும்.

மானிப்பாய்
5 - 1 - 72

**க. சொர்ணலிங்கம்**

## சித்தாந்தசாகரம், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின்

# ஆசியுரை

இரசத்தின் வெளிப்பாடே இலக்கியம் என்பர். இரசம் - சுவை. சற்பாத்திரங்களின் ஒழுகலாறுகளே சுவைக்கத்தக்கவை. இலக்கியங்களிலே அல்லாத பாத்திரங்களின் இயல்புகளை எடுத்து வருணிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. அச் சந்தர்ப்பங்களில் அந்தப் பாத்திரங்களைத் தீண்டாமல், நல்ல பாத்திரங்களின் போக்கு எப்படி இருக்கும் என்பதைச் சிந்திக்கவைத்துச் செல்வது இலக்கியத்தின் தனித்த மாண்பாயிருக்கும். ஒரு கூனியை, சகுனியை, கைகேசியைக் கட்டித் தழுவச் செய்வது புலமை ஆகாது.

அருளென்ற போர்வையிற் பொருளைக் கட்டி அழுந்தும் போலிச் சாமியார்களின் போக்கை நடித்துக் காட்டும் நடிகன் ஒருவன், மெய்த்துறவியின் போக்கு எப்படியிருக்குமென்பதைச் சிந்திக்கவையாது நடிப்பானாயின், நாஸ்திகப் பைத்திய நாய்களைக் கட்டவிழ்த்து விட்டவன் ஆவன். செக்கு, சிவலிங்கம் எல்லாம் ஒன்றாய் விடும்.

பரிசுத்த பாத்திரங்களின் தூய ஒழுகலாறுகளே சுவைக்கத்தக்கவை. அவை அன்பு செய்வதற்குரியவையாய் அமையும்போது, அவற்றின் வெளிப்பாடு இலக்கிய எல்லையைக் கடந்ததாயிருக்கும். அன்பின் வெளிப்பாடே தமிழ். அதுதானே சங்கத்துச் சான்றோர் ஆராய்ந்த தமிழ்.

தமிழ் என்றால் அன்பு. 'அன்பினைந்திணைக் களவியல் என்னுதலிற்றோவெனின் தமிழ் நுதலிற்று' என்றார் நக்கீரர்.

அன்பு பெற்றெடுக்குங் குழந்தை அருள். 'அருள் என்னும் அன்பீன் குழவி' என்றார் தேவர். ஆகவே தமிழ் பெற்ற தமிழ்க்குழந்தை அருள்.

ஃ ஃ ஃ

இரசிகமணி கனக. செந்திநாதன் இளமைதொட்டு இலக்கியச் செல்வத்தில் முழுகித் திளைத்தவர். இனி அவருக்கு அது அமையும். இளைப்பாறிய இந்தக்காலத்திலே, தூய இலக்கியச் சுவைகளில் அன்பு செய்து தமிழ்ச்செல்வராய்த் திகழ்வாராக என்று மனமுவந்து வாழ்த்துவோமாக.

இரசிகமணிக்குப் போர்த்தும் பொன்னாடை, தூய இரசனைகளாகிய சுவைகளைப் பேணி அன்புமயமாக்கிச் சுத்தத் தமிழாடையாய்த் திகழ்வதாக.

அருள் என்னுங் குழந்தை உதயமாதற்குப் பிரார்த்திப்போமாக.

கலாசாலை வீதி
திருநெல்வேலி
30 - 12 - 71

**சி. கணபதிப்பிள்ளை**

# மன்றத்தின் நுழைவாயிலினூடே......

நான்கு ஆண்டுகளுக்குமுன் ஆரம்பிக்கப்பட்ட எமது மன்றம் தத்தித் தவழ்ந்து தளிர்நடை நடந்து இன்று ஐந்தாம் ஆண்டில் அடி எடுத்துவைக்கின்றது. மன்றம் ஆரம்பமான நாளிலிருந்து இன்றுவரை தனது இலட்சியங்களை நிறைவேற்றிக் குறிக்கோளையடைய அல்லும்பகலும் அயராது அலுக்காது பாடுபட்டுவருகின்றது. மன்றத்தின் குறிக்கோளான நவீன வசதிகள் கொண்ட நூல்நிலையம் ஒன்றினை உருவாக்குவதில் முழு வெற்றியையும் இன்று அடையாவிடினும் வெகு விரைவில் அதனை நிறைவேற்றும் என்பது எமது மனப்பூர்வமான நம்பிக்கையாகும்.

கடந்த நான்கு ஆண்டுகளில் மன்றம் நிகழ்த்திய சாதனைகள் பல. ஆண்டு தோறும் திருவெம்பாவை விழா, பொங்கல் விழா என்பவற்றைச் சிறப்பாகக் கொண்டாடியதும், இவ்வாண்டு திருவெம்பாவை விழாவை நடாத்தியதும் குறிப்பிடக்கூடியவையாகும். வருடந்தோறும் சிறந்த கலை, இலக்கியப் பிரமுகர் ஒருவருக்குப் பொங்கல் விழாவில் விருது வழங்கிக் கௌரவித்து மன்றத்தின் இலட்சியத்தை நிறைவேற்றிவந்துள்ளோம்.

மன்ற விருது பெற்றவர்கள்......

1968ஆம் ஆண்டில் பண்ணலை, திரு. க. திருநாவுக்கரசு அவர்களுக்குப் ''பண்ணிசைச் செல்வர்'' என்ற விருதினை மகாஜனக் கல்லூரி அதிபராகவிருந்தவரும், சமாதான நீதிபதியுமாகிய தெ. து. ஜயரத்தினம் அவர்கள் வழங்கினர். 1969ஆம் ஆண்டு அளவெட்டியைச் சேர்ந்த திரு. ந. குமரகுரு அவர்களுக்கு ''லயஞான லாவண்ய கலாபதி'' என்ற விருதினைச் சங்கீத மேதை சித்தூர் சுப்பிரமணியபிள்ளை அவர்கள் வழங்கினார்கள். 1970ஆம் ஆண்டு தெல்லிப்பழை பிரம்மஸ்ரீ R. விசுவநாதையர் அவர்களுக்குப் பொற்கிழியீந்து, ''இசைஞானமணி'' என்ற விருதினை இசைப்புலவர் ந. சண்முகரத்தினம் அவர்கள் வழங்கினார்கள்.

இவ்வாண்டும் ஏறக்குறைய 300 இலக்கியப் படைப்புகளைத் தமிழுலகுக்கு ஈந்து இலக்கியப் பணியாற்றி வருபவரான குரும்பசிட்டியைச் சேர்ந்த இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்களுக்கு 'இலக்கியச் செல்வர்' என்ற விருதினை வழங்குவதன் மூலம் மன்றம், ஈழத்து இலக்கிய வளர்ச்சியைப் போற்றுவதில் பெருமைகொள்ளுகிறது. தமிழறிஞர்கள், கவிஞர்கள், இசைவல்லுநர்களைப் பாராட்டுவதிலும், கலை வளர்ச்சியிலும் மன்றம் கொண்டுள்ள ஆர்வத்தை அறிஞர்கள் பலர் பாராட்டிச் சால்புரை வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

அறிஞர் அண்ணாவுக்கு நினைவு அஞ்சலி விழாவும், ''மகாகவி'' ஞாபகார்த்த விழாவும், பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களுக்குப் பாராட்டு விழாவும் நடாத்தி மன்றம் பெருமைப்படுத்தியுள்ளது. ''மகாகவி'' ஞாபகார்த்த தமிழ்ப்புலமைப் பரிசுக்குரிய சுற்றுக்கேடயம் ஒன்றினை, மகாஜனக் கல்லூரிக்கு வழங்கியதன் மூலம் அன்னாரின் பெயரை என்றும் நினைவுகூரச் செய்துள்ளோம்.

நாடகக்கலைத் துறையில் மன்றத்தின் சாதனைகள் அளப்பரியன. பத்துக்கு மேற்பட்ட நாடகங்களைத் தயாரித்துப் பல மேடைகளில் நடித்து நாடகத்துறையில் புதிய திருப்பத்தை மன்றம் உண்டுபண்ணியுள்ளது. ''நல்ல தீர்ப்பு'' என்ற நாடகம் இரு தங்கப் பதக்கங்களையும், பாராட்டுப் பத்திரங்களையும், வெள்ளிக்

கிண்ணத்தையும் சிறந்த இயக்குநருக்கான பரிசையும் பெற்றது. ''நீங்காத நினைவு'' என்ற நாடகமும் இரு தங்கப்பதக்கங்களையும், சிறந்த நடிக நடிகையர் பரிசு களையும் பெற்றுள்ளது. ''சிதைந்த வாழ்வு'' நாடகம் ஒரு தங்கப்பதக்கத்தைப் பெற்றது. மன்றம் தயாரித்த எந்த நாடகமும் தரங்குறையாமலும் சிறந்த நாடக உத்திகளைக் கொண்டதாகவும் விளங்கியமையைக் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களே புகழ்ந்து பாராட்டியுள்ளனர். நாடகங்கள் மூலமாகவே மன்றத்தின் புகழ் அதிக அளவில் பரவியுள்ளது என்று கூறினால் மிகையாகாது.

இத்தனை சாதனைகளையும் புரிந்துவரும் மன்றம் சந்தித்த சோதனைகள் பல. மன்றத்தின் நான்கு ஆண்டு வளர்ச்சியை நோக்கும்போது அது கடந்துவந்த காட்டாறுகள் எவ்வளவு என்பது நாமறிவோம். எத்தனையோ மேடு பள்ளங் களையும், படுகுழிகளையும் தாண்டித்தான் இம்மன்றம் முன்னேறி வருகிறது. சிறுமதி படைத்தோர் இன்னல் பல தந்தனர், தடைகள் ஆயிரம் அமைத்தனர். ஆனால் இலட்சியவேட்கை கொண்டோரின் அயரா முயற்சி இந்த எதிர்ப்புக்களையெல்லாம் வெற்றிகொள்ளச்செய்துள்ளது. பொறாமை கொண்டோரின் தூற்றல்கள் ஒருபுறம், ஆற்றல் அற்றவர்களின் ஆற்றாமை ஒருபுறம், மன்றத்தை நிலைகுலைக்க முயன்றோர் ஒருபுறம். இப்படிப்பட்ட மும்முனைத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்து ''தூற்றுவார் தூற்றட்டும்'' என்ற பொறுமையுணர்வோடு செயலாற்றியதனால்தான் மன்றம் வளர்ந்து பலர் மதிக்கும் நிலைக்கு வந்துள்ளது என்பதைக் குறிப்பிடாமலிருக்க முடியாது.

ஒரு மன்றம் சீரான முறையிற் செயற்படவேண்டுமாயின் மன்ற அங்கத்தினர்க ளிடம் ஒற்றுமை வேண்டும். என்ன இலட்சியத்திற்காக மன்றம் ஆரம்பிக்கப் பட்டதோ அந்த இலட்சியத்தை அடையச் சகலரும் ஒருமுகமாகப் பாடுபடல் வேண்டும். தம்மிடையேயுள்ள வேறுபாடுகளை மறந்து மன்றத்தின் வளர்ச்சியையே நோக்கமாகக் கொண்டு உழைத்தல் வேண்டும். மன்ற விழாக்களில் பங்கு கொள்வோர் உயரிய நோக்குடையவர்களாக இருக்கவேண்டுமேயொழிய, பொறாமை மனப்போக்குள்ளவர்களாக இருக்கக்கூடாது. தமது கருத்துக்கள் மாறானவையாக இருப்பினும் தாழ்மையுடன் தெரிவிக்கும் பண்பு இருக்கவேண்டுமே யன்றி எதையும் எடுத்தெறிந்து பேசும் சர்வாதிகார மனப்பாங்கு கொண்டவர்க ளாக இருக்கக்கூடாது. மன்றம் வாழவேண்டும், மன்ற இலட்சியங்கள் காப்பாற்றப் படவேண்டும் என்ற உன்னத எண்ணம் ஒவ்வொரு அங்கத்தினரிடையேயும் மிளிர வேண்டும். அப்போதுதான் மன்றம் சீரியமுறையில் நடக்கும். மன்றத்தை ஏனையோர் மதிப்பர். மன்ற நடவடிக்கைகளைப் போற்றுவர்.

மன்றம் தொடர்ந்தும் நல்லமுறையில் செயலாற்றிக் கலை, கலாச்சார வளர்ச் சிக்குப் பாடுபடுமென்று உளமார நம்புவோமாக!

வணக்கம்.

— நிர்வாகக் குழுவினர்

---

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை — நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு.**

## Maheswary Grinding Mill

★ மிளகாய்
★ குரக்கன்
★ அரிசி

முதலியன

அரைத்துக் கொடுக்கப்படும்.

## மகேஸ்வரி கிரைண்டிங் மில்

காங்கேசன்துறை வீதி

**மல்லாகம்**

உரிமையாளர்: க. இரத்தினம்

"உங்கள் விழா சிறப்புற வாழ்த்துகிறோம்"

எந்தவிதமான அச்சுவேலையும்

O சிறந்த முறையில்
O குறைந்த செலவில்
O குறுகிய காலத்தில்

செய்து கொடுக்கப்படும்.

சகலவிதமான
வாழ்த்துப் பத்திரங்களும்
விற்பனைக்குண்டு.

விபரங்களுக்குத்
தொடர்பு கொள்ளவும்

## மொழியரசி அச்சகம் & புத்தகசாலை

**அளவெட்டி**

உரிமையாளர்: வா. சி. மாணிக்கம்

## RAVI'S STORES

★ மோட்டார் சயிக்கிள்
★ தண்ணீர் இறைக்கும் இயந்திரம்
★ மோட்டார் கார்

ஆகியவை
சிறந்த முறையில்
திருத்திக் கொடுப்பவர்களும்
உப உறுப்புக்கள்
விற்பனை செய்பவர்களும்

## ரவீஸ் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி — **சுன்னாகம்**

உரிமையாளர்: P. ரவிகுலரத்தினம்

## கணேஸ் மரத் தொழிற்சாலை

வீட்டுக்குரிய

☐ கதவு
☐ யன்னல்
☐ தளபாடங்கள்

ஆகியவை
நேர்த்தியான முறையில்
குறித்த தவணையில்
செய்து கொடுக்குமிடம்

## கணேஸ் மரத் தொழிற்சாலை

காங்கேசன்துறை வீதி

**சுன்னாகம்**

உரிமையாளர்: வ. சி. சின்னத்துரை

# பொங்கல் தமிழ்

**கவிஞர் வி. கந்தவனம்**

எங்குந் தமிழ் எல்லாந் தமிழ்
என்றுந் தமிழ் வாழ்க
சங்கந் தருஞ் சான்றோர் தமிழ்
தங்கத் தமிழ் வாழ்க
தங்குந் தமிழ் தாங்குந் தமிழ்
தானே தமிழ் வாழ்க
பொங்குந் தமிழ் பூக்குந் தமிழ்
பொங்கல் தமிழ் வாழ்க!

அன்புத் தமிழ் அறிவுத் தமிழ்
அறஞ்செய் தமிழ் வாழ்க
என்பும் பிறர்க் கீயுந் தமிழ்
இணையில் தமிழ் வாழ்க
இன்பத் தமிழ் ஏகத் தமிழ்
இறைவன் றமிழ் வாழ்க
தன்பக் கலில் ஈர்க்குந் தனிச்
சாந்தத் தமிழ் வாழ்க!

ஊக்கந் தரு மாக்கந் தரும்
உண்மைத் தமிழ் வெல்க
நீக்குந் துயர் போக்குங் குறை
நேர்மைத் தமிழ் வெல்க
நோக்குந் தரும் வாக்குந் தரும்
நுண்மைத் தமிழ் வெல்க
காக்குந் தமிழ் காலம் முழு
தாக்குந் தமிழ் வெல்க!

அலகிற் கலை யாகித் திகழ்
ஆதித் தமிழ் வெல்க
குலமால் வரை கொடி நாட்டிய
கொற்றத் தமிழ் வெல்க
அலைமா கடல் கல மோட்டிய
ஆற்றல் தமிழ் வெல்க
உலகத் தமிழ் திலகத் தமிழ்
ஒப்பில் தமிழ் வெல்க!

பத்தித் தமிழ் பாட்டுத் தமிழ்
பணிவுத் தமிழ் போற்றி
முத்தத் தமிழ் மூலத் தமிழ்
முத்தித் தமிழ் போற்றி
சித்தித் தமிழ் செம்மைத் தமிழ்
தெய்வத் தமிழ் போற்றி
எத்திக் கிலு மறிவார் தினம்
ஏத்துந் தமிழ் போற்றி!

ஆளுந் தமிழ் அருளுந் தமிழ்
அன்னை தமிழ் போற்றி
வாழுந் தமிழ் வளருந் தமிழ்
வாழ்க்கைத் தமிழ் போற்றி
ஆழித் தமிழ் அண்டத் தமிழ்
அப்பர் தமிழ் போற்றி
ஊழிக் குமொ ரூழித் தமிழ்
ஓமாந் தமிழ் போற்றி!

---

# சுதந்திரப் பொங்கல்

**கவிஞர் தெல்லியூர் நா. ஆறுமுகம்**

நல்லறிவுச் சுடர்கொளுத்தி மதியைத் தூண்டி
நச்சரவுப் பேதகுண விருளை மாற்றி
எல்லொளியில் மண்ணதனி லுழவி னாலே
எப்பொருளும் சேர்த்தின்பப் பொங்கல் பொங்கி
வல்லமைசேர் தமிழனது பண்டை வாழ்வை
வகுத்தறத்தின் வழுவாத செல்வம் மல்கச்
சொல்லரிய கருணையன்பு சுரந்து சீவர்
சுதந்திரமாம் மாணிக்கம் பெறும்நா ளன்றே!

பேறறிஞர் அமரர் அண்ணு

# பால் பொங்கிற்ரு?

இன்று திருநாள்! இல்லந்தோறும் இளைஞரும் முதியோரும், இரு பாலரும் 'பொங்கலோ பொங்க' லென்று மகிழ்ச்சியுடன் குரலெழுப்பி, தாமும் தம்மைச் சூழ இருப்பவை யாவுமே புதியதோர் பொலிவு பெற்றிருப்பது கண்டு, 'நலிவெலாம் ஒழிந்தது; நல்லன யாவையும் இனிக் கிடைத்திடும் என்று நம்பி, மகிழ்ச்சிப் பெருக்குடன் மற்றையோரும் மனைதோறும் இருத்தல் கண்டு நாடே விழாக்கோலம் பூண்டுளது என்று பெருமிதம் கொள்வதற்கே அமைந்த விழாநாள்! பால் பொங்கிற்ரு? என்று அன்பு பொங்கக் கேட்டு அகமகிழச் செய்யும் நன்னுள்! இன்பம் பொங்கும்! எங்கும் தங்கும்! மகிழ்ச்சி பொங்கும்! மனையெலாம் வழியும்! புத்தம் புதுக்கோலம் பெற்று இல்லமெல்லாம் எழிலோவியமாகும். அன்புமணம் எங்கும் கமழும். பூங்கா சென்ற புள்ளினமும், மலரிடை உலவும் வண்டினமும் கானம் கிளப்பிடுவது போன்றதோர் களிப்பொலி எங்கும் எழும். பனி தொலேந்தது; பரிதி அப்பகையினை விரட்டினுன். நிலமடந்தைக்குப் புதிய எழிலூட்டினுன். நடுங்கும் குளிர் இனி இல்லை. வாழ்வை நொறுக்கும் கேடுகட்கு இனி ஆதிக்கம் இல்லை.

விளைந்தது குவிந்திடக் கண்டோம், வினையின் பயனைக் கொண்டோம். செயலின் செழுமை விளங்கிற்று, செய்தொழிலின் மேன்மை துலங்கிற்று. உழவன் பெருமையை உலகமே புகழ்கிறது. உலகுக்கே அத்தொழில் அச்சாணி என்று மகிழ்ந்து உரைக்கின்றனர் அறிஞர் பெருமக்கள்.

—நன்றி 'முக்கனி'

படித்தவர்கள், பண்புள்ளவர்கள், நல்ல பிரசாரப் பழக்கமுள்ளவர்கள், பகுத்தறிவை ஆயுதமாக உடையவர்கள் பயமறியாதவர்கள் —

இவர்களால்தான் வீழ்ந்த சமுதாயத்தை உயர்த்த முடியும்.

— அமரர் அண்ணு

## பேரின்பம் விளைத்திடுவோம்

**அரியாலையூர் வே. ஐயாத்துரை**

மண்ணைத் திருத்தி மணியைப் புகுத்தி மறுபெயர்க்கும்
உண்ணக் கொடுக்கும் உழைப்பாளர் தம்மின் உதவிதனை
எண்ணிப்பே ரின்பம் விளைத்திட இந்த இகத்தினிலே
கண்ணைக் கணித்திடல் போலவ ரைத்தினம் காக்குகவே!

பெட்டிப் பணத்தினைக் கொட்டி இறைத்தும் பெரும்வயலால்
நட்டம் அடைந்திடி னும்நலி வுற்றிடார் நல்லுழவோர்
வட்டி கொடுத்தெனும் மற்றோர் பணத்தினை வாங்கியவர்
கெட்டித் தனத்தொடு கீர்த்திமி குந்தொழில் செய்குவரே!

கட்டழ காகிய காயத் திருந்தே கனவியர்வை
கொட்டி உழுதிடு வார்முதற் கோலப் பசளையதாய்
ஒட்டி உலர்ந்திடும் உந்திக் குதவிடும் உத்தமர்கள்
தட்டி எழுப்பிடு வாருல கத்தினைத் தாழ்விலதே!

வெய்யிற் கொதிப்பினில் பெய்யும் மழையில் மிகுபனியில்
மெய்யும் மெலிந்திடக் கையும் வரண்டிடு வேளையிலே
வையந் தனில்விளைந் துய்வை யளித்திடு மாபயிர்கள்
தையில் தரும்பயன் தக்கபே ரின்பத்தைத் தந்திடுமே!

ஊரெங்கும் உழுதொழிலை ஊக்கிடுவோம் உணவுநிறைப்
பேரின்பம் விளைத்திடுவோம் பிறர்பொருளை அபகரியோம்
பாரெங்கும் சமநிலையைப் பரவநெறி பகர்ந்திடுவோம்
சீரோங்கும் தைதனிலே திருப்பொங்கல் பொங்கிடுவோம்.

---

## பொங்கல் மலர்

**வித்துவான் நா. சிவபாதசுந்தரன்**

முக்குணங்கள் மூன்றடுப்பாய் மூப்புடலே பானையாய்
புக்குயிர் பால்நீர் பலவினைசெய் — தக்கரசி
மூளவாத் தீபொங்கும் மும்மலை முல்லைப்பெண்
கோளுலகில் கோப்பொங்கல் கேள்.

மார்கழிநீர் ஏந்திய மாதேநீ ஏற்றுபொங்கல்
தேர்வரும் எல்லோன் திசைவிளங்கத் — தேரா
பழனப் புதுப்பொருள்கள் பாங்காய்ப் படைப்பாய்
குழலிசைபோல் பொங்கல் எடுத்து.

வால்முறுவல் நல்லாய் வயலரிசி நற்குழிசில்
பால்நீரிற் பாகாய்ப் பரவல்காண் — எல்பெறவே
சொல்பெறும் நாஞ்சிலொடு நல்லாவும் நாடுறச்
சொல்லுவம் பொங்கற் சிறப்பு.

வருவாய் வளர்மார்பா வாழ்த்துவம்தைப் பொங்கல்
திருவாய் நினதாள் சிறக்க — உருவாய்
தயங்கும் நிறைசிறக்க தக்கோர் உளத்தால்
முயங்கும் முறைசிறக்க என்று.

## மன்றத்தின் 1972ஆம் ஆண்டுக்கான விருது



ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில்
முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்த் தொண்டாற்றி வரும்
பிரபல எழுத்தாளரும், திறனுய்வாளருமான

# இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்களது

இலக்கியப் பணியைப் பாராட்டி,

## தெல்லிப்பழை அம்பனைக் கலைப்பெரு மன்றம்

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டு
தைத்திங்கள் முதலாம் நாள் ( 15 - 1 - 72 )
மகாஜனக் கல்லூரியிற் கொண்டாடிய

## நான்காவது ஆண்டு உழவர் விழாவில்

# "இலக்கியச் செல்வர்"

என்ற

## விருதினை அன்னருக்கு வழங்கிக் கௌரவிக்கின்றது.

'குறமகள்'

# கனதியான மனிதர் - கனக. செந்திநாதன்

கலைப்பெரு மன்றம் தமது பொங்கல் விழாவிலே திரு. கனக. செந்திநாதன் அவர்களைக் கௌரவித்துப் பாராட்டப்போகிறது என அறிந்து கழிபேருவகை கொண்டோம்.

கலைஞர்கள் எல்லோரும் உள்ளொளி பெற்றவர்கள். இந்த மனிதக் கூட்டுக்குள் இருந்துகொண்டே சாதாரண மனிதனுல் சாதிக்கமுடியாத பெரிய காரியங்களைச் சாதிக்கின்றனர். ஆனல் கட்டைச் சிறுமதி படைத்த மனிதரோ கலைஞரின் மாண்பை உணராது, வேண்டாத சித்தாந்தங்களை வலிந்து கற்பித்துக் கலையாக்கங்களை அவமதிக்கின்றனர். இல்லாததை எண்ணி உள்ளதை இகழ்கின்றனர். அதனுலெல்லாம் கலைஞனின் ஆத்மவிலாசம் அடங்கிப்போவதில்லை.

பண்டைக்காலத்தில் ஏதோ ஒருவகையில் புலவர்கள் சிலர் சமஸ்தான கவிஞர் என்றே அஸ்தானகவிஞர் என்றே பதவியைப்பெற்று மன்னரின் சலுகையை அடைவதுண்டு. ஆனல் அவர்களிலும் புலமைமிக்கோர் பலர் மக்கள் அன்பைப் பெற்றுத் தன்மானங் காத்துக்கருக்குடன் வாழ்ந்தனர். ஆஸ்தான புலவரை அடக்கிவைத்த அறிவுமிக்கசான்றேரின் வரலாற்றையும், அவர்கள் மக்களால் மதிக்கப்பட்ட கதையையும் புலவர் வரலாறுகளில் காண்கின்றேம். அதுபோல மக்கள் அன்பைப் பெற்று அவர்தம்உள்ளங்களிலெல்லாம் வாழும் பேறுபெற்றவர் இரசிகமணி அவர்கள். இத்தகைய சொல்லேருழவர் ஒருவர் பசிதீர்க்கும் 'உழவர் திருநாளிலே' மக்கள் மன்றம் ஒன்றுல் புகழ்ந்தேற்றப்படுதல் போற்றற்குரியதே.

ஆம். திரு. கனக. செந்திநாதன் அவர்கள் தமிழ்கூறும் நல்லுலகின் மூலைமுடுக்கெல்லாம் வாழ்கிறுர். அவரைத் தெரியாதாரும் இல்லை. நினையாதாரும் இல்லை. அன்போடு ஆதரிப்பார் சிலர் - மதிப்போடு போற்றுவார் சிலர் - பயத்தோடு கவனிப்பார் சிலர் - துவேஷத்தோடு எண்ணுவார் இன்னும் சிலர் - அழுக்காறுல் எரிந்து அலட்சியம் செய்வார் ஒரு சிலர். எவர் எப்படி நினையினும் இத்தகைய பல மனேநிலைகளுடன் கூடிய உணர்வுகளோடு அவர் நினைவு யாவர் உள்ளத்திலும் நிறைந்திருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஒருவருடைய இயற்கையான ஆற்றல் - புலமை என்பவை அவரது பட்டம் பதவிகளோடு தொடர்புடையன அல்ல என்பதை நிரூபிப்பதுபோல்ச் சாதாரண தமிழாசிரியரான இரசிகமணி அவர்கள் உயர்பீடங்களுக்கெல்லாம் ஒரு சவாலாக அமைகிருர். வானமெல்லாம் பரந்த சூரிய ஒளியை யாராவது இருட்டடிப்புச் செய்யமுடியுமா? இருட்டடிப்புச் செய்ய முயல்பவர் தம்மைத் தாமே இருட்டடிப்புக்குள்ளாக்கினவராகவன்றே அமைவர்.

கவிஞர் - புலவர் - எழுத்தாளர் என்போரது தோற்றம்பற்றிப் பலரது படைப்புகளையும் வாசித்த அனுபவங்கொண்டு ஒரு வரைவிலக்கிணத்தை நாம் வகுக்கக் கூடியதாக உள்ளது. அத்தகைய நிலைக்கு ஒருசிறிதும் விதிவிலக்காக அமையாமல், பார்த்த உடனே இவர் ஒரு எழுத்தாளர்தாம் என்பதைப் பறைசாற்றுவதுபோல அமைந்தது அவரது தோற்றம். மெலிந்து, காய்ந்து, நடக்கவே திராணியற்ற

உடற்றோற்றத்தைக் கொண்டுள்ள செந்தியவர்களின் எழுத்துக்களோ மிகத் திட்பமும் நுட்பமும் வாய்ந்தவை. அதிலும் மேலாக அவரது மேடைப்பேச்சுக் களோ ஆணித்தரமாக - புத்திபூர்வமாக - திடசங்கற்பமாக - தர்க்கரீதியாக - அஞ்சாமையினிடமாக அமைந்து தோற்றமும் விளைவும் ஒன்றல்ல என்பதை நிரூபிப்பவை.

'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பது பழமொழியாயினும் வரலாற்றிலே எம் கண்ணோட்டத்திலே பண்டிதக்காய்ச்சல் உடையோர் பலர், பிறரை மதிக்காது, நெஞ்சகத்தில் வஞ்சகத்தைப் பொருத்தி, மற்றையோரைப் புழுக்களாக மதித்து வாழ்கின்றனர். ஆனால் கனக.செந்திநாதன் அவர்களின் பரந்த மனப்பான்மையும், பண்பார்டும் உலகம் அறிந்த ஒன்று. தான் வாழ்ந்தால் மட்டும் போதாது, பிறரை யும் வாழவைக்கவேண்டும் என்பதைக் கொள்கையளவில் மாத்திரமல்லச்செயலிலும் காட்டிச் சந்தனக்கட்டைபோல் தான் தேய்ந்து பிறருக்கு மணமூட்டும் அந்தப் பெருந்தன்மையை வேறு யாரிடத்தும் காணமுடியாமல் இருக்கின்றது. அவர் தூக்கிவிடாத எழுத்தாளர் இல்லை. கைகொடுத்துதவாத கலைஞரில்லை. வளர்ந்து வரும் எழுத்தாளரைச் சோர்ந்துவிடாது ஊக்கமளித்து உரமேற்றுவார். மறைந்து கிடக்கும் கவிதைகளுக்குப் புது மெருகேற்றி மேடைகளில் முழங்கி வாழவைப்பார். கடலின் அடியில் கண்ணிற்படாது கிடக்கும் முத்துக்களை உலகின் கண்ணிற்பட வைக்கச் சுழியோடுவார். குவிந்துகிடக்கும் எழுத்தோவியங்களை அழிந்துபோகா மல் புத்தகரூபமாக்கும்படி செய்வார். பேச்சுவன்மையுடையோரைக் கவனித்து மேடைகளில் வாய்ப்புகள் பெற்றுக் கொடுப்பார். இத்தகைய விலாசமான மனப் பான்மை அவரது உயர்ந்த பண்பாட்டையும், நூற் பயிற்சிகளாற் பெற்ற பெருந் தன்மையையும், தொண்டுணர்வையும், தியாகத்தையும் உலகத்துக்குக் கொடுத் தியம்புகின்றது.

ஆக்க இலக்கியங்களைப் படைத்தல் மாத்திரம் இலக்கியப் பணியாகாது என் பதற்குச் செந்தியின் இலக்கிய வாழ்வே சான்றாகின்றது. 'வெண்சங்கை'க் கண் டோர் செந்தி பிரபல சிறுகதை எழுத்தாளர் என்பர் - 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி'யைப் பார்த்தோர் ஆராய்ச்சியாளரல்லவா என்பர் -'ஈழந்தந்த கேசரி'- வரலாற்று நூலாசிரியர் தானே என்னும் - 'கவிதைவானில் ஓர் வளர்பிறை' இலக்கிய ரசிகர் எனக் கூறும் - கட்டுரைகளோ ஓர் தலைசிறந்த விமர்சகர் என முழங்கும். இப்படியே பலருக்கும் பல தோற்றங்களைக் காட்டும் செந்திக்கு நிகர் செந்தியேதான்.

இலக்கிய ரசிகராய், இலக்கிய விமர்சகராய் - இலக்கிய கர்த்தராய் விளங்கும் இக் கனதியான மனிதர் இலக்கியத்துக்குச் செய்த பணிகளைக் கண்டு நாம் வியக் கின்றோம். அவர், தாமும் வாழ்ந்து தம் குடும்பத்தையும் வாழவைத்து, இலக்கிய உலகத்தையும் வாழவைக்க எல்லாம்வல்ல இயற்கையன்னை உறுதுணை புரியவேண்டு மென வணங்குகின்றேன்.

மேலாக,

"பொன்னுடை பூட்டியந்தப்
புலவனைப் புகழ்வதென்ற
நன்னய உணர்ச்சி கொண்ட
நண்பர்கள் பலரும் வாழ்க"

என்ற நாமக்கல் கவிஞரின் வாழ்த்தைக் கலைப்பெரு மன்ற அங்கத்தவர்மீது சுமத்தி வணங்குகிறேன்.

நா. ஆறுமுகம்

# இன்பம் பொங்குக! துன்பம் மங்குக!

''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்பது முதுமொழி. தைப்பொங்கற் பண்டிகை தமிழன் பண்டிகை; உழவன் திருநாள்; தனது விடாமுயற்சியால் பூமி திருத்தி உணவுப் பொருளை விளைவித்துப் புதுப் பொருள்களைப் பெற்றுப் பிறர்க்கும் உதவி இன்பம் பெறும் பெருநாள்.

உழவன் முற்றத்தில் மங்களகரமான பாற்பொங்கல் பொங்கினுற்றுன் ஊரெங்கும் பாற்பொங்கல் பொங்கும். ''உழவினர்,கைமடங்கினில்லை விழைவதூஉம் விட்டேமென் பார்க்கு நிலை'' என்பது தேவர் வாக்கு. உழுபவன் நிலத்தைச் சொந்தங் கொண்டாடிச் சுதந்திர மனிதனுக வாழும்வகை எங்கும் பரவும் பொழுதுதான் நாட்டில் தன்னிறைவு உண்டாகும். ''செங்கோலை நடாத்துங்கோல் ஏரடிக்கும் சிறுகோல்'' என்ற முன்ஞேர் வாக்கும் சிந்திக்கத்தக்கது. உழவும், தொழிலும் நாட்டுவளத்துக்கு அச்சாணிகள் போன்று சுதந்திரச் சகடத்தை இயக்கச் செய்பவை என்ற உண்மையை நாம் உணருதல்வேண்டும். புதுவாழ்வு தொடங்கும் பொங்கல் நாளில் சுகவாழ்வும், உல்லாசமும், எதிர்காலக் கனவு களும் முகிழ்க்கின்றன. உணவும், உடையும், பிற பொருட்களும் நாட்டில் நிறைய, சுதந்திரப் பொங்கலின் சுவையின்பத்தை எல்லோரும் அனுபவிக்கச்செய்ய, தீய குணங்களையகற்றி நற்சிந்தனைகளை வளர்க்க ஒவ்வொருவரும் பிரதிக்கினை செய்ய வேண்டிய நாள் இந்நாளாகும்.

''புதியன கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்போர்'' என்பது கம்பன் வாக்கு. அன்பும், அறிவும், அறமும், திருவும், ஆற்றலும் இன்பவாழ்வும் பொங்கிய இந்த நாளிலே இலக்கியமும் கலையும் விளங்குவதற்கு விழா எடுப்பதும் மகிழ் வூட்டுவதாகும். துன்பம் மங்கி இன்பம் பொங்க ஏழையும் செல்வரும் ஒன்று கலந்திடும் இந் நன்னுளில் வீடு புதுக்கி, ஆசாரம் போற்றி, கடவுளைத் துதித்து, குத்துவிளக்கேற்றி, கோலமிட்டு, பாற்பொங்கல் பொங்கிப் படைத்து, ஞாயிற்றுத் தேவனைப் போற்றி மகிழ்வதில் ஆண்டு முழுவதும் அடையும் இன்பவாழ்வு கலந் துள்ளது.

பொங்கலோ பொங்கல்; பாற்பொங்கல்; பட்டிகப்பொங்கல் எங்கும் விளங்குக. பூமித்தாயின் மடியிலே தவழ்ந்து முயன்று கதிரவன் அருள் பெற்று மாட்டுச் செல்வம் பேணி உழுது விளைவித்து நன்றிக்கடன் செலுத்தும் இந்த நாளில் செந் நெல்லும், கரும்பும், மஞ்சளும், கதலியும், பாலும் இல்லமெங்குப் பரவி மனத்தில் பூரண இன்பத்தை உண்டாக்குகின்றன. இயற்கையழகில் தோய்ந்து நிறைவாழ்வுக் கனிச்சுவையை நுகரச்செய்கின்றன. கடமையிற் செம்மை கண்டு மகிழ்ந்து நச்சுப் பாம்பையொத்த நினைப்புகளையகற்றி, புத்தம்புதிய தமிழ்க் கருத்துகளை உணர்ந்து, கவிதையும் சொற்பெருக்கும் சுவைக்க வாய்த்தது இந்தநாள்.

புனலாடிப் பொன்னிழை அணிந்து, அகமும், புறமும் ஒன்ருகி மனமாசு நீக்கி மகிழும் மங்கலநாளில் உள்ளம் துள்ளுகிறது. உலகெங்கும் வியாபித்துப் பரந்த எண்ணத்தை உண்டாக்குகின்றது. ஏழைகளை வாழ்விப்போம்; அகந்தையை அடக்கு வோம்; பணிவும், இன்சொல்லும் அணிகலனுகக் கொள்ளுவோம். அணைத்த கரம்

அடிப்பதுபோல இயற்கையன்னை சீறிச் சிலவேளைகளில் பெருவெள்ளமாக, புயலாக எழுந்தாலும், அவற்றைத் தாங்கி வள்ளுவன் வகுத்த சால்பு நெறியைக் காப்பாற்ற முயன்று பாடுபடுவோம். பாதகச் செயல்களை வெறுத்து ஒதுக்குவோம். கதைகள் பேசிக் காலம்போக்காது திட்டமிட்டுச் செயல்புரியத் தொடங்குவோம் சங்கத் தமிழனது சிறப்பான வாழ்வை மீண்டும் நிலைநாட்ட முயலுவோம். அக்கிரமம், அநீதி, வஞ்சனை, பொருமை போன்ற தீய குணங்கள் அறவேயொளியக் கலைச் சுவையும், தமிழ்ச்சுவையும் பரவுமாறு செய்வோம். கற்பனையால் அகந்தை கொண்டு கருத்துக்களைச் சிதைக்கும் பாவிகளும் கருணையுள்ளம் கொண்டு தமிழன் முன்னேற்றத்திற்கு உதவவேண்டுமெனப் பொங்கற் புதுநாளில் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

❋

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்வர். — குறள்

★ ★ ★

## கருத்தூட்டும் பண்பாளர்

பாட்டுப் படைக்கும் பெரியோரை மக்களுக்குக்
காட்டி யவர்தம் கருத்துக்களை — ஊட்டும்
பணியில் மகிழ்வெய்தும் பண்பாளர்க் கெங்கே
யிணைசொல்ல ஏலும் எனக்கு.

— இரசிகமணிமாலையில் **அமரர் "மகாகவி"**

❋

**எந்தக் கொள்கையையும், நெறியையும் தெரிந்துகொள்வது மட்டும் போதாது; சரியாக உணரவும் வேண்டும். வெறும் வைராக்கியத்தால் மட்டும் எதையும் சாதித்துவிடமுடியாது.**

— டி. கே. சீனிவாசன்

## மன்ற வரவு செலவுத் திரட்டு 15-8-70 — 15-8-71

| | வரவு | செலவு |
|---|---|---|
| நாணல் நிதி உதவிக் காட்சி | 984-40 | 523-21 |
| கலைமகள் விழா | — | 24-55 |
| கார்த்திகைத்தீப விழா 1970 | — | 34-33 |
| திருவெம்பாவை 1970 | 311-00 | 275-42 |
| உழவர் விழா 1970 | 550-20 | 695-82 |
| நாடகப் பொது வரவு செலவு | 364-60 | 316-04 |
| பொது வரவு | 17-00 | 108-02 |
| மகாகவி நினைவு விழா | 873-00 | 750-55 |
| பொற்கிழி நிதி | 1241-00 | 1241-00 |
| மேலதிகச் செலவு (கடன்) 15-11-68—15-8-70 | — | 72-22 |
| மேலதிக வரவு 15-8-70-15-8-71 | — | 300-04 |
| | 4341-20 | 4341-20 |

**க. முருகதாசன்**
பொருளாளர்

**நா. ஆறுமுகம்**
பெரும்பொருளாளர்

மேற்படி மன்றத்தின் வரவு செலவு விபரங்கள் சரிபார்க்கப்பட்டன.

**க. பத்மசேகரம்**
(எண் ஆய்வாளர், கணக்கியற் பகுதி
கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்)


# வளர்மதி வைத்தியசாலை

— நாகமுத்து பரம்பரை வைத்தியம் —

**சண்டிருப்பாய்**

கிளை : தெல்லிப்பழை

**பார்வையிடும் நேரங்கள்**

**சண்டிருப்பாய் :** காலை 7-00 மணி — மாலை 2-00 மணி வரை
மாலை 4-30 மணி — இரவு 10-00 மணி வரை

**தெல்லிப்பழை :** மாலை 2-00 மணி — மாலை 4-00 மணி வரை

Dr. எஸ். திருநாவுக்கரசு, D. A. M. & R. I. M. P. (இலங்கை)
H. O. I. C. (இந்தியா)

பதிவு இல. **5217**

# நான்காவது ஆண்டு உழவர் விழா

இடம்: இலங்கையர் கோன் அரங்கு, மகாஜனக் கல்லூரி

காலம்: தைத்திங்கள், முதல்நாள் (15-1-72) சனிக்கிழமை மாலை 5-30 மணி

தலைவர்: திரு. மா. மகாதேவன், B. A., (cey.) B. A., Hons. (Lond.) Dip - in - Ed. (cey.)
(அதிபர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)

## நிகழ்ச்சி நிரல்

மாலை 5-30 மணி: மங்கல விளக்கேற்றல்:
திரு. தெ. து. ஜயரத்தினம், B. A., J. P. அவர்கள் (மன்றக் காப்பாளர்)

வரவேற்புரை: திரு. பொன். நாகரத்தினம், அவர்கள் (துணைத் தலைவர்)

தலைமைப் பேருரை: விழாத் தலைவர்

விருது வழங்கல்:

விருது பெறுபவர்: இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள்

விருது வழங்குபவர்: சித்தாந்தசாகரம், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

பாராட்டுரை பகர்வோர்:
பண்டிதர் க. சச்சிதானந்தன், B. A. அவர்கள் (தமிழ் விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)
திரு. ச. விநாயகரத்தினம், அவர்கள் (மன்றத் தலைவர்)
திரு. ஆ. சிவநேசச்செல்வன், B. A. (Hons.) அவர்கள் (தமிழ் விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

கவியரங்கம்: "எங்கெழிலென் ஞாயிறு"

தலைவர்: கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை

கவிஞர் வி. கந்தவனம், B. A.
கவிஞர் சி. மௌனகுரு, B. A. (Hons.)
கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை
மதுரகவி இ. நாகராஜன்
கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை

சிறப்புச் சொற்பொழிவு:

"ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்"
கலாநிதி கா. சிவத்தம்பி அவர்கள் (தமிழ்த்துறைத் தலைவர், வித்தியோதய பல்கலைக் கழகம், கொழும்பு)

"தை பிறந்தது, வழி பிறக்குமா"
திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் (வழக்குரைஞர்)

இன்னிசைக் கச்சேரி:
சங்கீதபூஷணம் திருமதி நேசபூபதி நாகராஜன்

பக்கவாத்தியம்: திரு. ஆர். ராதாகிருஷ்ணன் - வயலின்
திரு. ஐ. சிவபாதம் - மிருதங்கம்

நாடகம்: "மலர்ந்தும் மலராத"
(தங்கப்பதக்கம் பெற்ற மன்றத் தயாரிப்பு)

நன்றியுரை: திரு. வை. குணாளன் அவர்கள்

## என்றும் எம் நன்றிகள்......

★ விழாவிற்கு நல்லாசிகளும் வாழ்த்துகளும் வழங்கியவர்களுக்கும்.

★ விழாத்தலைவருக்கும், நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட பெரியோர்கள் கலைஞர்கள் அனைவருக்கும்.

★ மலர் சிறப்புற அமைவதற்கு விளம்பரம் தந்துதவியவர்களுக்கும்.

★ விழாவுக்கு நிதியுதவி செய்த அன்பர்களுக்கும்.

★ மலரின் பொலிவிற்கு விஷயதானம் நல்கிய அறிஞர்களுக்கும் கவிஞர்களுக்கும்.

★ இம் மலரினை குறுகிய காலத்தில், சிறந்த முறையில் அழகுற ஆக்கித்தந்த குகன் அச்சகத்தினருக்கும்.

★ எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த நண்பர்கள் ஆதரவாளர்கள் அனுதாபிகள் அனைவருக்கும்.

—விழா அமைப்பாளர்கள்

நன்றி மறப்பது நன்றன்று - நன்றல்லது
அன்றே மறப்பது நன்று,

## A. PERAMPALAM

சகலவிதமான
**ஆயுர்வேத மருந்துவகைகளும்**
**மூலிகை வகைகளும்**
**கோயிலுக்குரிய அபிஷேகத் திரவியங்களும்**
நிதானவிலையில் கிடைக்குமிடம்

## ஐ. பேரம்பலம்

**( மருந்துச்சரக்கு வியாபாரம் )**
காங்கேசன்துறை வீதி, **சுன்னாகம்**

*With Best Compliments*

*of*

# K. Jeyabalasingam & Co.

**SHIPPING AGENTS**

**KANKESANTURAI**

*With Best Compliments*
*from*

**SELVAM STORES**
Point Pedro Road
**KANKESANTURAI**

அன்பளிப்பு

**ஆனந்தா அச்சகம்**
காங்கேசன் துறை வீதி
**யாழ்ப்பாணம்**

அன்பளிப்பு

**ஸ்ரீலங்கா**
**அச்சகம் – புத்தகசாலை**
239, கே. கே. எஸ். வீதி
**யாழ்ப்பாணம்**

சகவித
தளபாட தேவைகளுக்கும்
வீட்டுத் தேவைகளுக்கும்
O நேர்த்தியானமுறையில்
O குறித்த காலத்தில்

பலவித மரங்களும்
அரிந்துகொடுப்பவர்கள்

**ராஜன்**
**மரமரியும் தொழிற்சாலை**
உரிமையாளர்: வே. சிவராசா
காங்கேசன் துறை வீதி
**சுன்னுகம்**

சகல அச்சுவேலைகளையும்
நுணுக்கமாகவும்
துப்பரவாகவும்
அழகாகவும்
நியாயமான செலவில்
★ ஆங்கிலம்
★ தமிழ்
★ சிங்களம்
ஆகிய மூன்று மொழிகளிலும்
குறிக்கப்பட்ட தவணையில்
செய்துகொடுக்கும்
ஸ்தாபனம்

**அர்ச், பிலோமினு அச்சகம்**
102, பெரியதெரு
**யாழ்ப்பாணம்**
தொலைபேசி : 395

உயர்ந்த ரகம்! நிதான விலை!
உங்கள்
திருமண வைபவத்திற்கேற்ற
சிறந்தரக
★ மணிப்புரி கூறைத் தினுசுகள்
★ பட்டுவகைகள்
★ பருத்திப் புடைவை வகைகள்
★ கைத்தறி நெசவுத் துணிகள்
இன்றே விஜயஞ் செய்யுங்கள்

**ஜெயரும்ஸ்**
**புடைவை மாளிகை**
16, காங்கேசன்துறை வீதி
**சுன்னுகம்**

V I N K

★ தரமான ★ விலையிற் குறைந்த

**"விங்க்" மை**

**விங்க் போல்போயின்ற் பேனுக்களை**

உபயோகியுங்கள்

விநியோகஸ்தர்
காார்கில்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
கொழும்பு

தயாரிப்பாளர்
வெள்ளியம்பதி
அளவெட்டி

அறுசுவை உண்டிக்குச் சிறந்த இடம்

# டீலக்ஸ் டூரிஸ்ட் கொட்டல்

* குளிர்பானங்கள்
* சிற்றுண்டிகள்

நவீன வசதிகள்கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு.

உங்களை அன்புடன் உபசரித்துத் திருப்திசெய்ய
ஆவலுடன் காத்திருக்கின்றது

## டீலக்ஸ் டூரிஸ்ட் கொட்டல்

பருத்தித்துறை வீதி — காங்கேசன்துறை



★ ஓடர் நகைகள் ★

குறித்த தவணையில் உத்தரவாதத்துடன்
உடனுக்குடன் கவனிக்கப்படும்.

எவ்வித மங்கள வைபவங்களுக்கும்
தேவைப்படும்
தங்க, வைர நகைகளுக்கு
எம்மிடம் விஜயஞ் செய்யுங்கள்

## முருகன் ஆபரண மஹால்

சுந்தரோடை வீதி — சுன்னாகம்

(பஸ் நிலையத்துக்கு முன்பாக)

" உள்நாட்டு உற்பத்திகளே தேசியச்செல்வம் "

உங்கள் இல்லங்கள் தோறும் இருக்கவேண்டியவை

"யாழ்" மார்க்

அலுமினியப் பாத்திரங்களே

★

★ அழகும் ★ பிரகாசமும் ★ உழைக்கும் திறனும்

ஒருங்கே அமையப்பெற்றவை

யாழ் மெட்டல் இண்டஸ்றீஸ்

250 - 252 காங்கேசன்துறை வீதி

யாழ்ப்பாணம்



குகன் அச்சகம், தெல்லிப்பழை